**Kalanjiyam - International Journal of Tamil Studies**
Volume: 5 | Special Issue 1 | December 2024 | eISSN: **2456-5148**

‘

# Om Shakti Magazines' Community Service

**A. Gayathri[1], Ph.D. K. Thanalakshmi[2]**

*1. Postgraduate Researcher (Full Time), Tamil Department, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Bharathiar University, Coimbatore.*

*2. Assistant Professor, Tamil Department, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Bharathiar University, Coimbatore.*

**Abstract**
Communication is crucial in the contemporary world. While our ancestors initially communicated through basic means like light, gestures, and cave paintings, the eventual development of language provided a more efficient method for expressing human emotions. Today, we have a vast array of communication tools, including radio, television, newspapers, and the internet, which keep us apprised of news both domestically and internationally. The introduction of Western ideas significantly impacted the growth of the journalism sector. Magazines evolved from primarily religious publications to outlets that tackled broader societal issues, offering timely reporting on topics such as medicine and agriculture. The monthly magazine “Om Shakti,” published by Mahalingam Aiya’s family in Coimbatore, is an example of this evolution. This article will explore how effectively "Om Shakti" serves its intended purpose within society

# ஓம் சக்தி இதழ்களின் சமுதாயப்பணி

**அ.காயத்ரி[1], முனைவர். க.தனலட்சுமி[2]**
[1] **முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)** , தமிழ்துறை , நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.
[2] **உதவிப்பேராசிரியர், தமிழ்துறை**, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

**ஆய்வுச்சுருக்கம்**

*சமகாலச் சூழலில் தகவல் தொடர்பு என்பது மிக இன்றியமையாத ஒன்றாகிவிட்டது நம் முன்னோர்கள் ஆரம்ப காலத்தில் ஒளி, சைகை, ஓவியம் வரைந்து எனப் பல முயற்சிக்குப் பிறகு மொழி உருவானது. மனித மன உணர்வுகளை எளிதில் வெளிப்படுத்துவது மொழியே ஆகும். நம்மைச் சுற்றியுள்ள செய்திகளை அறிந்து கொள்வதும் வெளியூர் வெளிநாடுகளில் நடக்கும் செய்திகளைப் பற்றி தெரிந்து கொள்ள இன்று வானொலி, தொலைக்காட்சி, பத்திரிக்கை, இணையம் இன்னும் பல தொடர்பு சாதனங்கள் வளர்ச்சி பெற்று விட்டன. மேலைநாட்டினரின் வருகை, பத்திரிக்கை துறை வளர்ச்சிக்கும் பெரிதும் உதவியது. சமயத்தை மட்டுமே வெளிப்படுத்தி வந்த இதழ்கள் பின்னாளில் சமுதாயம் தழுவி எதிர்காலம்; மருத்துவம், வேளாண்மை என பல்துறைகளிலும் உண்மையை உடனுக்குடன் தெரிவிக்கின்றன. அவ்வகையில் “ஓம் சக்தி” மாத இதழ் மகாலிங்கம் ஐயா அவர்களின் குடும்பம் சார்பாக கோவையை மையமாகக் கொண்டு வெளி வந்து கொண்டிருக்கிறது இவ்விதழ் சமுதாயத்திற்கு, தம் பணியைச் செய்கிறது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## இதழ்கள் அறிமுகம்

இந்தியாவில் இதழ்களின் தோற்றம் அசோகரின் காலம் ஆகும். அன்றாட நிகழ்வுகளை மக்களுக்கு முதன் முதலில் அசோகரின் கல்வெட்டுகளே தெரியப்படுத்தியன. கால வளர்ச்சியின் அடிப்படையில் மக்கள் தம் உணர்வுகளையும் செய்திகளையும் தகவல் தொடர்பு சாதனங்களின் வழி பகிர்ந்து கொண்டனர் "இருவர் அல்லது இரு அமைப்புகளுக்கு இடையே நடைபெறுகின்ற செய்திப் பரிமாற்றமும் அதனால் ஏற்படும் தெளிவும் தகவல் தொடர்பு எனப்படும்".(தகவல் தொடர்பியல் ப.1)என தகவல் தொடர்பு குறித்து வே. கிருட்ணசாமி குறிப்பிடுகின்றார். தகவல் தொடர்பியலில் இன்றியமையாதவை இதழ்களும் பத்திரிகைகளும் ஆகும் [TM01].
"உலகின் முதல் மக்கள் தொடர்பு சாதனம் பத்திரிகைதான். அறிவியல் வளர்ச்சி காரணமாக வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் ஆகியவை தோன்றின".(நடைமுறை இதழ்கள் ப.16) என்று இரா. குமார் குறிப்பிடுகின்றார். இதழ்கள் இன்றைய சூழ்நிலையில் அரசியல், மருத்துவம், கல்வி, வாணிகம், வேளாண்மை என அனைத்துத் துறையிலும் நடுநிலையுடன் செயல்படுகின்றன .

## ஆன்மீகச் சிந்தனைகளும் திருக்கோவில் பற்றிய குறிப்புகளும்

பக்தியின் மொழி தமிழ் என்பார்கள். இறை வழிபாடு பக்தி நிறைவு மன அமைதி, தியானம் என அனைத்தும் இந்தியாவின் இன்றியமையாத தன்மைகள் ஆகும்.

## வழிபாடு

மனித வாழ்வில், வழிபாடு என்பது மிக இன்றியமையாத ஒன்றாகும். எல்லா மதத்தினரும் வழிபாடுகள் மேற்கொள்கின்றனர். தனிமனித ஒழுக்கத்தை மட்டுமல்லாது சமுதாய ஒழுக்கத்தையும் அறனையும் காப்பது வழிபாடுகள் ஆகும். "கடவுள் வழிபாடு என்பது வெறும் சடங்கன்று ,வழிபாடு என்பது உயிர் உள்ள ஒரு முயற்சி, அறிவார்ந்த அறிவு, ஆள்வினை! எண்ணுதல், நினைத்தல் ஆகிய அகநிலைப் பயிற்சி மூலம், ஆன்மா தன்னை உயர்த்திக் கொள்வதற்கு, துணை செய்வதும் வழிபாடு" (ஆலயங்கள் சமுதாய மையங்கள்.ப.8) என வழிபாட்டின் தேவையைக் குறித்து குன்றக்குடி அடிகள் விளக்குகின்றார்.
"மக்கள் எந்தச் செயலைத் தொடங்கினாலும் முதலில் கடவுள் வணக்கம் செய்தே வினையைத் தொடங்கினர் திருமண நிகழ்ச்சிக்கு முன்பு கடவுள் வழிபாடு இயற்றினர்" (ஆற்றுப்படை இலக்கியத்தில் தமிழர் வாழ்வியல்.ப.148) என பி. சேதுராமன் வழிபாட்டின் முதன்மை பற்றி குறிப்பிடுகின்றார்.
கடவுளை வழிபடும் நேரம், காலம் என முறைகள் உள்ளன. "சூரியன் துலா மாதத்தில் சஞ்சரிக்கும் வேலையில் சந்திரனைச் சந்திக்கும் அமாவாசை நாளில் ஸ்ரீ லட்சுமி தேவியை வழிபடுவது சிறப்பானது" (ஓம் சக்தி, நவ. ப.50). உகந்த நேரத்தில் வழிபாடு என்பதும் இன்றியமையாததாகும்.
"இறுதிவரை கூட வந்து நம்மை இறைவனுடன் ஐக்கியப் படுத்துவது என்பது நாம் பெற்றிருக்கக் கூடிய பரம்பொருள் பற்றிய ஞானமும் அந்த ஞானம் காட்டிய வழியில் நாம் நம் வாழ்க்கையில் புரிந்த அறப்பணிகளும் தான்."; (ஓம் சக்தி, டிச.ப.72). காலச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு வழிபாட்டு முறைகளிலும் முன்னேற்றமே ஏற்பட்டுள்ளன அலுவலகச் சூழல் கல்லூரி, பள்ளி, வணிகம் என உயர்ந்துள்ள துறைகளைப் போன்றே நாகரீக உலகில் ஆன்மீகத் தன்மையும் உயர்ந்தே காணப்படுகிறது.

## தொழில்நுட்ப வளர்ச்சி

அறிவியலின் இன்றியமையாத தேவை மனித வளர்ச்சியின் மிக முக்கிய பங்கினை வகிக்கிறது. நவீனத்துவத்தின் அடிப்படை, அறிவியல் வளர்ச்சியே ஆகும். விஞ்ஞானத்தின் முதிர்ச்சி நிலை இக்காலகட்டம் ஆகும். வளர்ச்சியில் சில தீமைகள் இருப்பினும் நன்மைகள் எண்ணில் அடங்காதவைகள் ஆகும். செயற்கை நுண்ணறிவு பற்றி அறியாதவர்கள் இன்றளவில் யாரும் இருக்க முடியாது.

“உங்களையும் என்னையும் போல் உலகில் உள்ள கோடிக்கணக்கானவர்களில் தேர்வுகள் விருப்பங்கள் போக்குகள் குணங்கள் ஆகியவற்றை இந்த ஏ.ஐ புரிந்து கொண்டு நமக்கான பரிந்துரைகளை வழங்குவதே செயற்கை நுண்ணறிவு மென்பொருள்கள்” (ஓம் சக்தி, நவ. ப. 196) என்று கூறப்படுகின்றது. இவ்வாறாக மனித சக்தியை விட கணினியின் திறன் 2030 ஆம் ஆண்டிற்குள் மிக உயர்வானதாக ஆகிவிடும். மனிதனின் ஒட்டுமொத்தத் திறனையும் கொண்டு செயலாற்றக் கூடியதாக இருக்கும்.
நன்மையும் தீமையும் அனைத்துச் செயல்பாட்டிலும் இருக்கும். இவற்றைப் பயன்படுத்தும் முறை என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மனிதனின் தேவையும் விஞ்ஞானத்தைப் போன்றே விரிவடைந்து விட்டது அதனால் தான் அவனுடைய அறிவுக்கு ஏற்ற வகையில் கண்டுபிடிப்புகளும் அதிகமாக இருக்கின்றன. முன்னேற்றம் என்பது வளர்ச்சிப் பாதையில் செல்வதும் எல்லோருக்கும் நன்மையைத் தருவதும் தீமையைத் தருவதும் பயன்படுத்துபவர்களின் அறிவைப் பொறுத்தே அமைந்துள்ளது.

### கவிதைகளில் வெளிப்படும் சமுதாயப் போக்கு

மனித உணர்வினை வெளிப்படுத்தத் தொடங்கியதும் மொழி(எழுத்து, பேச்சு) தோன்றின பிறகு இலக்கியம் படைக்கக் கற்றுக் கொண்டனர். மேலும் கதை, கவிதை, நாவல் எனப் பன்முகத்தன்மையுடன் வளர்ச்சி பெற்றது. “மரபுக் கட்டுப்பாடுகளைப் பற்றி அதிகம் கவலைப்படாமல் படைப்பாளர் தம் சிந்தனையை அல்லது உணர்வினைத் தமக்கு தோன்றிய ஒரு வடிவத்தில் வெளியிடுவதனை புதுக்கவிதை எனலாம்” (இலக்கியத் திறனாய்வு. ப.242) என்று புதுக்கவிதை குறித்து சு. பாலச்சந்திரன் தமது நூலில் குறிப்பிடுகின்றார்.
சமுதாயத்தைக் குறித்தான வெளிப்பாடு அதிகமாக கவிதைகளில் காணப்படுகிறது. புதுக்கவிதைகளில் சமுதாயப் பாங்கினை மிக எளிமையான முறையில் உணர்ந்து கொள்ள முடியும்.

சமுதாயம் என்பது “ஒரு பொதுவான வாழ்க்கையின் அடிப்படை நிலையைப் பங்கிட்டு, ஒரு குறிப்பிட்ட இடத்தில் சேர்ந்து வாழ்கின்ற மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படுகிறது” (வாழ்வியல் களஞ்சியம் தொகுதி.8,ப.471) தமிழப்; பல்கலைக்கழகம் றிப்பிடுகிறது.பொருளைத் தேடி ஓடும் வாழ்க்கை ஓடிக்கொண்டே முடிந்து விடுகிறது. வாழ்வதை மறந்து பணத்தை தேடும் எண்ணம் இங்கே முதன்மையாக உள்ளது. இறுதியில் எதுவும் உடன் வருவதில்லை. இதை உணரும்போது வாழ் நாட்கள் முடிகிறது. உண்மையை உணர்ந்து கூறினால் அவர்களை, இவ்வுலகம் பித்தன் என்கிறது இதனையே,

“ஓடி ஓடி பணம் சேர்க்கும் பேராசை எனக்கிலை,
எதிர்பார்ப்பு ஏதுமிலை ஏமாற்றம் எனக்கிலை ,
பற்றின்றிருப்பவனை துறவியென பகிர்கின்றனர்
பற்றற்று வாழுமெனை அழைக்கின்றார் பித்தென்றே”
(ஓம் சக்தி.பிப்.ப.98)

என்ற வரிகள்,இருப்பதை மற்றவர்களுக்குக் கொடுத்து உதவும் பழக்கம் நம்மிடையே இருக்குமாயின் அதுவே சிறப்பானதாகும் என்று இயம்புகின்றன. சமுதாயத்தில் நிகழும் வறுமை,ஊழல் தொழில் செய்யும் இடங்களில் ஏற்படும் சிக்கல்கள், வன்முறை என்று ஏதோ ஒன்று படைப்பின் கருவாகிறது. புதுக்கவிதை உருவாவதற்கும் வித்து ஆகிறது எனலாம். கவிதையும் சமுதாயச் சிக்கல்களும் இப்போது ஒன்றோடு ஒன்றாக இணைந்தே காணப்படுகிறது. அவசரமான சூழ்நிலையில் உடன் வருபவர்கள் எப்போதும் கூட வருவதே இல்லை என்பதை,

“கூட வந்தவர்கள்
கொண்டு வந்து விட்டவர்கள்
நாட வந்தவர்கள்
நடைபழகி விட்டார்கள்
அவரவர் இடம் கண்டு
விடை தந்து நின்றவர்கள்
எதிரே வந்தவர்கள்
எனக்கு வழி தந்தவர்கள்

புதிராய் இணைந்தவர்கள்
போதனைகள் செய்தவர்கள்"        (மேலது)
என்ற வரிகளின் மூலம் உடன் இருப்பவர்கள் சென்று விடுவார்கள் இறுதிவரை நம்மை நம்பி நாமே பயணிக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

**சிறுகதைகளில் புலப்படும் சமுதாயம்**

கவிதை, சிறுகதை, புதினம் என அனைத்து வகையான இலக்கியத்திற்கும் கதை கரு சமுதாயத்தின் நிகழ்வுகளே ஆகும். சமுதாயத்தைப் பிரதிபலிப்பதே இலக்கியமாகும், மேலும் சிறுகதைகள் எளிதில் வாசகர்களைச் சென்று சேருகிறது என்பதாலும் இன்றளவும் பெரும் வளர்ச்சியைப் பெற்றுள்ளது. சிறுகதையின் கரு நாம் வாழும் பகுதியையும் சூழலையும் மட்டுமே சார்ந்துள்ளது. "தனிமனித வாழ்க்கை அல்லது சமுதாய வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட போக்கை அது சுவையோடு பிரதிபலிக்க வேண்டும்"; (பன்முக நோக்கில் அழகிய பெரியவனின் சிறுகதைகள்.ப.6). வாழ்வின் ஒவ்வொரு பகுதியும் கதையாகிறது என்பதை ஆய்வாளர் ஹேமா பாரதி குறிப்பிடுகின்றார். சமுதாயம் என்பது, "கூடியிருப்பினும் கூட்டுச் செயல்களில் ஈடுபடுவதும் அவற்றின் இன்பம் காண்பதும் மனிதனின் இயல்புகள் அந்த இயல்புகளை அலையே மனிதக் கூட்டம், ஊராகவும், நாடாகவும் சமுதாயமாகவும் உருவாகிற்று"(சமுதாய நோக்கு.ப.45)என்று சாலை இளந்திரையன் குறிப்பிடுகின்றார்.
கல்வி என்பது தன்னம்பிக்கை, ஒழுக்கம், நேர்மை இவற்றைக் கற்றுத்தர வேண்டும் என்பதே முதன்மையான நோக்கம். ஆனால் இன்றைய கல்வியோ மதிப்பெண் மட்டுமே முதன்மைப்படுத்திகிறது. பெற்றோரும் பிள்ளைகளின் அறிவுத்திறன் பற்றி தெரிந்து கொள்வதில்லை. மாறாக முதல் மதிப்பெண் பெற வேண்டும் என்று மாணவர்களின் மனதில் கவலையை விதைக்கின்றனர் இதையே "ஸ்வேதா எனும் தேவதை"என்னும் கதையில் எஸ். கே முருகனும் "தங்களுக்குக் கிடைக்காத சந்தோசம் மகிழ்ச்சி பெருமை எல்லாம் பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றனர.; ஆனால் அது குருவி தலையில் பனங்காயை வைத்த கதையாய் மாறி அவர்களுக்கு மன அழுத்தம் ஏற்படுவதை உணர்வதில்லை "(ஓம் சக்தி.ஆக. ப.25)என்று குறிப்பிடுகின்றார்.

ஏழ்மையிலும் துன்பத்திலும் பெற்றோர் பிள்ளைகளைக் கைவிடுவதில்லை.; பெற்றோர்கள் தன்னுடைய நிலை தன் பிள்ளைக்கு வந்து விடக்கூடாது என்று முனைப்புடன் செயல்படுகின்றனர். தனக்கு இல்லாவிட்டாலும் அவர்களுக்கு வேண்டும் என எடுத்து வைக்கும் மனம் கொண்டவர்கள் பிள்ளைகளோ அதற்கு முரண்பாடானவர்களாக மாறி வருகின்றனர் இதனையே "தாயாகி வந்த ஒரு தனி கருணை!" எனும் சிறுகதையில் ஆசிரியர் விமலாரமணி குறிப்பிடுகின்றார். அதாவது அசோக் என்பவன் பெங்களூரில் பணிபுரிகின்றான். அவனது தாய் மிகவும் துயரப்பட்டு அவனைப் படிக்க வைத்து நல்ல பணியில் அமர்த்துகிறார். அசோக் திருமணம் முடிந்தவுடன் தம் மனைவியுடன் இணைந்து இருக்க விரும்பினாலும் அவனுடைய மனைவி பானு அதற்கு அனுமதிப்பதில்லை. செய்வதறியாமல் அசோக் பெங்களூரில் பானு உடனே இருக்கிறான். சில நாட்கள் கழிந்ததும் குழந்தை பிறக்கிறான். குழந்தையைப் பார்த்துக் கொள்ள ஆளில்லாத காரணத்தால் அசோக்கின் அம்மாவை அழைக்கிறார்கள். "குழந்தை ஆயாவோட பராமரிப்பிலே நான் விட தயாரா இல்லை அம்மா குழந்தையைப் பார்த்துவிட்டால் போதும்" (ஓம் சக்தி தீப. மலர். நவ.ப.256) என்ற வரிகள் அசோக்கின் மனைவி சுயநலத்திற்காக மட்டுமே மாமியாரை அழைக்கிறாள் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வுலகில் எதிர்பார்ப்பில்லாத உறவு தாயும் தந்தையும் தான.; வாழ்வில் பல முன்னேற்றங்கள் வந்தாலும் ஒருபோதும் பெற்றோரை ஒதுக்குதல் கூடாது என்பதை இக்கதை உணர்த்துகிறது. பெற்றோர் நம்மை ஒதுக்கி இருந்தால் நம்மால் வாழ்ந்திருக்கவே முடியாது காலமும் சூழலும் மாறிக்கொண்டே தான் இருக்கும். ஏற்றார் போல் குடும்பமும் மாறி இருக்க வேண்டுமே தவிர ஒதுக்குதல் கூடாது.

**முடிவுரை**

அறிவித்தல் அறிவுறுத்தல் செய்திகளைப் பரப்புதல் முதலிய பணிகளைச் செய்வது இதழ்களும் பத்திரிகைகளும் ஆகும.; ஆரம்ப காலத்தில் மதங்களைப் பரப்புதலையே நோக்கமாகக்

கொண்டிருந்தது. கால வளர்ச்சி தொழில்நுட்ப மாற்றம் முதயென இதழ்களின் கட்டமைப்பையும் வளர்ச்சிடிபெறச் செய்தன. சமுதாயத்தில் நிகழும் தன்மைகளையும், தீமைகளையும் படம் பிடித்து காட்டுகின்றன. இதழ்களின் மூலம் ஆன்மீகம் மட்டும் இன்றி இன்றைய இந்தியா தொழில்நுட்பத்திலும் முன்னோடியாகவே திகழ்கின்றது என்பதை அறிய முடிகிறது. மேலும் நம் முன்னோர்கள் மூடநம்பிக்கையுடன் வாழ்ந்துவிடவில்லை என்பதை ஆன்மீகம் குறித்தான கட்டுரைகளின் வழியாக அறியமுடிகின்றது. அறிவியலும் ஆன்மீகமும் இரண்டும் இணைந்து காணப்படுகின்றன. மேலும் இவ்விதழில் வெளிவரும் கவிதை,கதை முதலிய படைப்புகள் அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கக்கூடிய சிக்கல்களையும் அதன் தீர்வுகளையும் வெளிக் காட்டுகின்றன. நம்முடன் வாழும் மனிதர்களைப் படைப்பாளிகளாக்கி, சுவையான படைப்புகளை உருவாக்கி அதற்கான, தீர்வுகளையும்
இவ்விலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன என்பதை இக்கட்டுரையின் வழி அறிந்து கொள்ள முடிகிறது.

### துணைநூற்பட்டியல்

1. கிருட்டிணசாமி. குவ - தகவல் தொடர்பியல்
2. குமரன. இரா. - நடைமுறை இதழ்கள்
3. குன்றக்குடி அடிகள் - ஆலயங்கள் சமுதாயமையங்கள்
4. சாளை இளந்திரையன் - சமுதாய நோக்கில் தமிழ் சிறுகதைகள்
5. சேதுராமன். பி - ஆற்றுப்படை இலக்கியத்தில் தமிழர் வாழ்வியல்
6. பாலச்சந்திரன். சு - இலக்கியத் திறனாய்வு
7. [TM01] இந்தியாவில் இதழ்களின் தோற்றம்: ஒரு விரிவான ஆய்வு https://tamilmanam.in/indian-journals-history/

### ஆய்வேடுகள்

1. ஹேமபாரதி - பன்முக நோக்கில் அழகிய பெரியவனின் சிறுகதைகள் களஞ்சியம்

2. வாழ்வியல் களஞ்சியம் - தொகுதி எட்டு, தமிழ்ப் பல்பழைக்கழகம், தஞ்சாவூர்.

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.